அசல் வழக்கு எண். 86/2018 நாள்: 20.11.2025

பி.சா.2 திரு.ஜெயபாலன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கை தாக்கல் செய்த வாதி ராதாகிருஷ்ணன் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள நிலம் என்னுடையது என்றால் சரிதான். எனக்கும் எனது தம்பியான வாதிக்கும் கடந்த 2000 திலிருந்து பிரச்சனை பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் இடையே சுமார் 10–க்கும் மேற்பட்ட உரிமையியல் வழக்கு உள்ளது என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.185/2004 என ஒரு வழக்கை வாதி எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனக்கு சகோதரருக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரியல்ல, எனக்கு ஆதரவாக தீர்ப்பானது. மேற்படி வழக்கில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகி அந்த உத்தரவை நான் மதிக்கவில்லை என்பதால் நிறைவேற்று மனு மூலம் என்னை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது என்றால் சரிதான்.

2) தஞ்சாவூர் நீதிமன்றத்தில் வைத்து என்னை விட்டுக்கொடுக்கும்படி வழக்கறிஞர் சொன்னார். எனது வழக்கறிஞர் கேட்டுக்கொண்டபடி வழக்கு சொத்தின் மோட்டாரை நான் விட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் அ.வ.எண்.147/2014 என்ற பாகபிரிவினை வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். எனது முதல்விசாரணை வாக்குமூலத்திலுள்ள சங்கதிகளை யார் சொன்னது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் எனக்கும் எனது சகோதரரான வாதிக்கும் இடையே சுமார் 25 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3) எனக்கு தமிழ் படிக்க தெரியும் என்றால் தெரியும். நான் தாக்கல் செய்த அ.வ.எண்.147/2014–ல் தாவா சொத்தில் உள்ள கிணற்றிலுள்ள மோட்டார் எனக்கும் வாதிக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்று நான் கட்சி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.147/2014–ல் தாவா சொத்தில் உள்ள கிணற்றிலுள்ள மோட்டார் எனக்கும் வாதிக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்று நான் கட்சி செய்துவிட்டு தற்போது இல்லை என மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் தாவா சொத்து உள்ளிட்ட

சொத்துக்கள் எங்களது தகப்பனார் 1995–ல் எழுதப்பட்ட உயிலின் அடிப்படையில் கிடைத்தது என்றால் சரிதான். அந்த உயிலில் கண்ட சரத்துப்படி மேல்புறம் உள்ள சொத்து எனக்கும், கீழ்புறம் உள்ள சொத்து வாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கீழ்புறம் உள்ள சொத்துதான் தாவா சொத்து என்றால் சரிதான்.

4) அ.வ.எண்.147/2014–ல் வழக்கு சொத்திற்கு கட்டுப்பட்ட மின்மோட்டாரை நானும் வாதியும் கூட்டாக பயன்படுத்துவதை வாதி தடுத்தார் என்றும், அதனால் வாதிக்கு எதிராக உறுத்துக் கட்டளை கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் 2009 லிருந்து 2014 வரை வழக்கு சொத்தில் உள்ள மின்மோட்டாரை 1–ஆம் பிரதிவாதி பயன்படுத்திக் கொள்ள போகத்திற்கு 5 மூட்டை என கணக்கிட்டு 2 போகத்திற்கு 10 மூட்டை நெல் 1–ஆம் பிரதிவாதியிடமிருந்து பெற்றவந்தேன் என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனது பாசன உரிமை தடுக்கப்பட்டநிலையில் நான் வேறொருவருக்கு தண்ணீர் பாய்ச்ச அனுமதியளித்ததாக சொல்வது வாதி மீது உள்ள முன்விரோதத்தால் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5) பிரதிவாதிகள் இந்த வழக்கு சொத்தை எந்த நிலையில் சாகுபடி செய்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த உடன்படிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து வழக்கு சொத்தில் 1–ஆம் பிரதிவாதிதான் நெல்சாகுபடி செய்து வருகிறார் என்று வாதியுடன் உள்ள முன்விரோதத்தால்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மின்மோட்டார் எனது கட்டுப்பாட்டில் இருந்தது என்று சொல்வது பொய் என்றாலும், எந்த காலத்திலும் எனது கட்டுப்பாட்டில் மின்மோட்டார் இருந்தது இல்லை என்றாலும் சரியல்ல, எனது கட்டுபாட்டில் மின்மோட்டார் இருந்ததால்தான் என்னை கைது செய்தார்கள். 2014–ல் என்னிடமிருந்து மோட்டாரை வாதி பெற்றுக் கொண்டார்.

6) உயிலின்படி பாகம் பிரிக்கப்பட்ட பிறகு மின்மோட்டார் வாதி வசம் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற உத்தரவுப்படி 37 செண்ட் நிலத்தை வாதியிடம் ஒப்படைக்கவில்லை என்பதால்தான் என்னை கைது செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது என்றால் பொய். மின்மோட்டாரை ஒப்படைக்கவில்லை என்பதால்தான் என்னை கைது செய்தார்கள் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி 1–ஆம் பிரதிவாதிக்கு மின்மோட்டார்

உட்படதான் கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் இல்லை, நிலத்தை பொறுத்து மட்டும் உடன்படிக்கை எழுதிக்கொடுத்துள்ளார்.

7) 2–ஆம் பிரதிவாதிதான் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார் என்றால் சரிதான். மின்மோட்டாரை சேர்த்துதான் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்று 2 ஆம் பிரதிவாதி என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. கிரைய உடன்படிக்கை ஏற்பட்ட காலத்திலிருந்து மின்மோட்டாரை நான் பயன்படுத்தவில்லை என்றாலும், தாவா சொத்தின் சுவாதீனம் பிரதிவாதிகள் வசம் ஒப்படைக்கப்படவில்ல என்றாலும், வாதி மீதுள்ள முன்விரோதம் காரணமாக பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதிதான் 2009–லிருந்து தாவா சொத்தில் சாகுபடி செய்து வருகிறார். 2 ஆம் பிரதிவாதியின் மோட்டாரை பயன்படுத்தி தாவா சொத்தில் 2014 முதல் சாகுபடி செய்துவருகிறார். எந்த காலத்திலும் பிரதிவாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை

S.d/ Jeyabalan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.11.20 19:23:19 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU